முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

(கொடைக்கானல் முகாம்)

O.S. No. 231/2018

தேதி : 07–02–2025

(வா.சா.2) – திரு. ஜார்ஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.A பொருளாதாரம். தற்போது என்ன வேலை பார்க்கிறேன் என்றால் வேலை பார்க்கவில்லை, முன்னர் தொழில் செய்தேன். வாதி என் உறவினரா என்றால் இல்லை. வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் சாட்சி அவருக்கு Secretary ஆக இருந்ததாக சொல்லிவிட்டு, பின்பு வாதி இடம் வாங்க விற்க செல்லும்போது தான் உடன் செல்வதின்மூலம் பழக்கம். பிரதிவாதியை எனக்கு தெரியாது என்றால் தெரியும். எப்படி தெரியும் என்றால் இடம் வாங்க விற்றல் என்ற முறையில் தெரியும். நான் இடம் வாங்கல் விற்றல் முகவர் தொழில் செய்கிறேன் என்றால் ஆமாம். 12.11.2016ல் ஒரு கிரைய உடன்படிக்கை ஆவணமும், 14.11.2016ல் ஒரு ஈடுகடன் பத்திரமும் வாதியும், பிரதிவாதியும் பிறப்பித்தத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. 2 பத்திரங்களுக்கு சேர்த்து ஒரே தொகைதான் கொடுக்கப்பட்டது என்றால் சாட்சி முதலில் ஆமாம் என்று சொல்லிவிட்டு, தற்போது இல்லை என்று மறுத்து கூறுகிறார். மேற்படி ஈடுகடன் பத்திரத்திற்கு முதலில் எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ.4 லட்சம். அந்த தொகைக்குதான் கிரைய உடன்படிக்கை பத்திரம் போடப்பட்டது என்றால் இல்லை. 2 பத்திரங்களையும் எழுதிய ஆவண எழுத்தரை தெரியுமா என்றால் தெரியும், அவர் பெயர் கணேசன். அந்த பத்திரங்கள் எங்கு எழுதப்பட்டது என்றால் கிரைய ஒப்பந்தம் திருச்சியிலும், ஈடுபத்திரம் கொடைக்கானலிலும் எழுதப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும், 2 பத்திரங்களுமே வழக்கறிஞர் திரு.கார்த்திகேயன் என்பவர் திருச்சியில் வைத்து எழுதினார் என்றால் சரியல்ல.

3. 2 பத்திரங்களிலும் நான் எங்கு வைத்து போட்டேன் என்றால் கிரைய உடன்படிக்கை ஆவணத்தை திருச்சியிலும், ஈடுகடன் பத்திரத்தில் கொடைக்கானல் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து போட்டேன். கிரைய உடன்படிக்கையின்படி கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. கிரைய உடன்படிக்கை பணத்தை மீண்டும்வாதி பெற்றுக்கொண்டாரா என்றால் இல்லை, கிரைய உடன்படிக்கையின்மூலம் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்றால் ரூ.1 லட்சம். கிரைய உடன்படிக்கையின்படி கிரைய பத்திரம் ஏன் பதிவு செய்யவில்லை என்றால் சார்பதிவாளர் அலவலகத்தில் அது பதிவு செய்யமுடியாது என்றார், அரசு அனுமதி பெறஇயலவிலல்லை பதிவு செய்யமுடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

4. அந்த சொத்து அரசால் வரன்முறை படுத்தப்படவில்லை என்றால் ஆமாம். கிரைய உடன்படிக்கை ஆவணத்தை பதிவு செய்ய இயலாத காரணத்தினால்தான் ஈடுகடன் ஆவணம் எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கையில் முன்தொகையாக ரூ.4 லட்சம் கொடுக்கப்பட்டது என்றும், அது பதிவு செய்ய இயலாத காரணத்தினால்தான் மேற்படி தொகைக்காக ஈடுகடன் ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் அடிப்படையில் கிரைய ஆவணம் பதிவு செய்ய இயலாத காரணத்தினால்தான் மேற்படி ஈடு ஆவணம் பிறப்பிக்கப்பட்டது என்றும், நான் முகவராக இருந்து செயல்பட்டதால் அந்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், ஆனால் தற்போது அதை மறைத்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்./-K.ரேணுகாதேவி
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.